# அர்ச். சூசையப்பர் ஜெபப் புத்தகம்



# பரிசுத்த மாந்தை - நவநாள் ஜெபங்கள்

*பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரித்து சாந்துவின் நாமத்தினாலே - ஆமென்.*

*சேசு மரி சூசை என் ஆத்துமத்தையும் சரிரத்தையும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.*
*(அர்ச். சூசையப்பருக்கு இத்தகைய மகிமையை அளித்தமைக்காக பிதாவாகிய சர்வேசுரனுக்கு தோத்திரமாக மூன்று தமத்திருத்துவ ஆராதனையை ஒப்புக்கொடுக்கிறது.)*

## காணிக்கை ஜெபம் 1

*மகிமை நிறைந்த பிதாப்பிதாவாகிய சூசையப்பரே, இதோ தேவரீருடைய திருப்பாதத்திலே சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறேன். ஆண்டவராகிய சேசுநாதரையும், உமது பரிசுத்த பத்தினியாகிய தேவமாதாவையும், மோட்சவாசிகளான சகல சம்மனசுக்களையும் அர்ச்சிஷ்டவர்களையும் என்னோடு இந்த பக்தி முயற்சியில் சேர்ந்து கொள்ளவேண்டுமென்று கெஞ்சி மன்றாடுகிறேன். தேவரீர் மீது உள்ள எனது பக்தியை காண்பிப்பதற்காக என் வாழ்நாள் முழுவதும் தேவரீரை மகிமைப்படுத்த என்னால் முடிந்தனைத்தையும் செய்வேன் என்று வாக்களித்து இந்த பட்டு மாந்தையை தேவரீருக்கு காணிக்கை ஆக்குகிறேன்.*

*அர்ச். சூசையப்பரே இப்பொழுதும் என் வாழ்நாள் முழுவதும் எனக்கு ஒத்தாசையாய் இரும். தேவரீருடைய மரண வேளையில் சேசுநாதரும் தேவமாதாவும் உதவியாய் இருந்தது போல எனது மரண வேளையில் தேவரீர் ஒத்தாசையாக இரும். ஒருநாள் நான் மோட்ச பாக்கியத்தை அடைந்து என்றென்றைக்கும் உம்மை மகிமைப்படுத்த வழி பண்ணியருளும். -றூமென்*

## காணிக்கை ஜெபம் 2

*ஓ மகிமை நிறைந்த பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே உம்முடையவும், உமது தேவமகனாகிய சேசுநாதருடைய முன்னிலையில் சாஷ்டாங்கமாக விழுந்துகிடந்து தேவரீர் அலங்கரித்த ஏராளமான புண்ணியங்களை மனதில் தியானித்து நெஞ்சம் நிறைந்த பக்தியோடு இந்த ஜெபக் களஞ்சியத்தை தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். மகிமை நிறைந்த தகப்பனே உம்முடைய முன்னோடியான சூசை கண்ட கனவு உம்மில் நிறைவேறியதே உண்மையில் அவரை பூமிக்கு அனுப்பியது உமது வருகையைக் காட்டத்தானோ! மாட்சிமை நிறைந்த சூரியனான ஆண்டவரும் குளிர்ந்த ஒளி தரும் நிலவான தேவமாதாயும் உமமைச் சூழ்ந்திருந்தது மட்டுமல்ல சூரியனான ஆண்டவரையும் தன் நிலவான மாமரியுடையவும் ஜோதிக் கதிர்களை நீர் பிரதிபலித்தீர். முதுபெரும் தந்தையான யாக்கோபு தன்மகன் சூசையைக் கண்டு மகிழ நீண்ட வழிநடந்து எகிப்திற்கு சென்றதோடு, தன் வழித்தோன்றல்களையும் அங்கு அழைத்துச் சென்று சூசைக்கு வணக்கம் செலுத்த வைத்தாரே. இதுபோல தேவாதாயும் சேசுநாதரும் உமக்கு மதிப்பும் மரியாதையும் செலுத்தியது மட்டுமின்றி ஏழை ஊழயியனான என்னையும் அழைத்து உமக்கு அந்த மாந்தையை அணிவிக்க வைத்தார்கள். தகப்பனே! என்னை ஆண்டவர் கருணைக் கண் நோக்கச் செய்யும். எகிப்து சூசை தனது கொடிய சகோதரர்களை தண்டிக்கவில்லை. மாறாக அவர்களை அன்புடன் ஏற்றுக் கோண்டு பட்டினியால் வாடாதவாறு அவர்களைக் காத்தார். பிதாப்பிதாவே பவியான என்னையும் ஆண்டவர் தண்டியாமல் கருணைக்கண் நோக்கி அந்த பரதேசத்தில் நான் வாடி வதங்கி போதாதவாறு ஆண்டவரிடம் மன்றாடும்.*

*நல்ல தகப்பனே! ஆண்டவர் என்னை உம்முடைய மாந்தையின் அடியில் வாழும் ஊழியான் என்று எண்ணச் செய்யும். தகப்பனே! உமது பாதுகாவலில் எந்நாளும் குறிப்பாக, என் மரண வேளையிலும் இருக்கச் செய்யும்.*

## முதலாம் ஜெபம்

*உலகனைத்தையும் படைத்துக் காத்தருளும் ஆண்டவருடைய, விண்ணிலும் மண்ணிலும் மாட்சிபெற்ற திரவியமான ஆண்டவருடைய வளர்ப்புத் தகப்பனாரே! வளனாரே! வாழ்க. தேவதாய்க்கு அடுத்தபடியாக எங்களது பக்திக்கும் வணக்கத்திற்கும் உரியவர் நீரே! பல அரசர்களும் தீர்க்கதரிசிகளும் காணவும் ஆராதிக்கவும் விரும்பிய மெசியாவை, வளர்க்கவும் வழிநடத்தவும் உணவூட்டவும் பாக்கியம் பெற்ற தகப்பனே! நீரே எல்லா அர்ச்சிஷ்டவர்களிலும் மேலானவர். தகப்பனே எனது ஆன்மாவை காப்பாற்றும். நான் மன்றாடி கேட்கும் சலுகைகளைப் பெற்றுத் தாரும். உத்தரிக்கிற ஸ்தலத்து ஆன்மாக்களுக்கு ஆறுதல் தாரும். (மூன்று தமத்திரித்துவ ஆராதனை சொல்லவும்).*

## இரண்டாம் ஜெபம்

*ஓ வல்லமையுள்ள அர்ச். சூசையப்பரே! உலகெங்கும் பரவியிருக்கும் திருச்பையை பாதுகாப்பவர் நீரே! அனைத்து அர்ச்சிஷ்டவர்களிலும் மேலானவர் நீரே! துயரப்படுகிறவர்களின் பெரிய ஆறுதல் நீரே! உம்மை நோக்கி கூக்குரலிடும் போதெல்லாம் எங்களுக்கு உதவ தயாராக இருப்பவர் நீரே! எனவே அர்ச். சூசையப்பரே! என் உள்ளத்தில் இருந்து எண்ணில்லாத ஸ்துதி புகழ்ச்சிகளை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். மகிமை நிறைந்த அர்ச். சூசையப்பரே விதவைகளுக்கும், அனாதைகளுக்கும், கைவடப்பட்டோரும், துன்புறுவோரும், ஒடுக்கப்பட்டோரும் உம்மை நோக்கி ஓடிவருகிறார்கள். நீர் ஆறுதர் படுத்தாத துயரமோ வேதனையோ, கஷ்டமோ, கவலையோ இல்லை என்பதை நினைவு கூரும். ஆகவே தகப்பனே! ஆண்டவர் உமக்கு அளித்த உரிமைகளை பயன்படுத்தி என் மன்றாட்டுக்கு பதில் அளித்தருளும். உத்தரிக்கிற ஸ்தலத்து பரிசுத்த ஆன்மாக்களே நீங்களும் அர்ச். சூசையப்பரிடம் எனக்காக பரிந்து பேசுங்கள்.( மூன்று திரித்துவ ஆராதனை சொல்லவும்).*

## மூன்றாம் ஜெபம்

*தகப்பனே எனக்கு முன் எண்ணிறைந்தோர் மன்றாடி ஆறுதலும் அமைதியும் அடைந்தார்களே! இதோ என் இருதயம் சோகத்திலும் துன்பத்திலும் அமிழ்ந்து இந்தப் பிரச்சனைகளால் அலைக்கழிக்கப்படுகிறது. ஓ மகிமை நிறைந்த அர்ச். சூசையப்பரே! நான் என் வேண்டுதலை உமக்குச் சொல்லிக்காட்டும் முன்பே என் தேவை எது என அறிவீரே! இந்த என் கோரிக்கையின் அவசரம் உமக்குத் தெரியுமே! இந்த நெருக்கடியின் பாரம் தாளாமல் இதோ உம்முன் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறேன். என் துயரத்தைப் புரிந்து கொள்ள எந்த மனித இருதயமும் எனக்குக் கிடைக்கவில்லை. ஒருவேளை அப்படிப் பரிவுள்ள ஒருவரை நான் கண்டாலும், எனக்கு உதவ முடியாது என்பது எனக்குத் தெரியும். அர்ச். சூசையப்பரே! எனது இந்த துன்ப வேளையில் உம்மால் மட்டுமே எனக்கு உதவமுடியும். ஆதலால் தேவரீர் என் மன்றாட்டை கேட்க வேண்டுமென்று கெஞ்சி மன்றாடுகிறேன். அர்ச். சூசையப்பரிடம் எந்த மன்றாட்டைக் கேட்டாலும் அது அவர்களுக்கு கிடைக்கும் என்பதை உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என்று அர்ச். தெரசம்மாள் சொல்லவில்லையா? அர்ச். சூசையப்பரே! உம்மீது நம்பிக்கை வைத்திருக்கும் ஏழை ஆன்மாக்கள் மீது இரங்கி அருளும். ( மூன்று திருத்துவ ஆராதனை சொல்லவும்).*

## நான்காம் ஜெபம்

*மாட்சிமை மிக்க பிதாப் பிதாவாகிய சூசையப்பரே! ஆண்டவரிடத்தில் உமக்குள்ள உத்தமமான கீழ்படிதலை முன்னிட்டு எனக்காக பரிந்து பேசும்.*

*சகலவரப்பிரசாதங்களும் பேறுபலன்களும் நிறைந்த உம்முடைய பரிசுத்த ஜீவியத்தை முன்னிட்டு என் மன்றாட்டை கேட்டருளும்.*

உம்முடைய இனிய நாமத்தை முன்னிட்டு எனக்கு உதவியருளும்.
உம்முடைய மகாபரிசுத்த கன்னியர்களை முன்னிட்டு என்னை தேற்றியருளும்.
உம்முடைய ஏழு வியாகுலங்களை முன்னிட்டு எனக்காக பரிந்து பேசும்.
உம்முடைய ஏழு சந்தோஷங்களை முன்னிட்டு எனக்கு ஆறுதல் தாரும்.
அனைத்து வகையான ஆன்ம சரீர தீமையிலிருந்து என்னை இரட்சித்தருளும்.
சகல ஆபத்துகளிலும், பேரழிவுகளிலும் இருந்து என்னை காப்பாற்றும்.
உம்முடைய வல்லமையுள்ள பரிந்து பேசுவதினால் எனக்கு ஒத்தாசையாக இரும். என் ஆன்ம இரட்சண்யத்திற்கும், எனக்கும் மிகவும் தேவையான இந்த விண்ணப்பத்தைப் பெற்றுத்தாரும் தகப்பனே!(மூன்று திரித்துவ ஆராதனை சொல்லவும்).

## ஐந்தாம் ஜெபம்

ஓ மகிமை நிறைந்த அர்ச். சூசையப்பரே! பல்வேறு நோய்களால் அவதிப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், வதைக்கப்பட்டோர், துரோகம் செய்யப்பட்டோர் எல்லா விதமான ஆறுதல்களையும் இழந்தோர் அன்றாட உணவுக்கும் வழியற்றோர் என அனைத்து வகை துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிக்கும் எண்ணற்ற ஆன்மாக்களுக்கு எண்ணற்ற வரப்பிரசாதங்களையும் சலுகைகளையம் ஆண்டவரிடமிருந்து பெற்றுத் தந்துள்ளீரே! என் தகப்பனே நான் மட்டும் மன்றாடியும் உம்முடைய உதவியை அடையாமற் போனேன் என்ற துயர நிலைக்கு என்னை ஆளாக்காதேயும். தகுதியற்ற எனக்கும் உமது தயாளத்தையும் தாராளத்தையும் காட்டியருளும். எனது பெரிய பாதுகாவலரும் உத்தரிக்கிற ஸ்தல ஆன்மாக்களின் பெரிய உபகாரியுமான பிதாப்பிதா சூசையப்பருக்கு நித்திய மங்களம் உண்டாகக்கடவது என்று உரத்த குரலில் கூவச் செய்தருளும். (மூன்று திரித்துவ ஆராதனை சொல்லவும்).

## ஆறாவது ஜெபம்

பரலோகத்திலிருச்கிற நித்திய பிதாவே! சேசு மரி சேய்த புண்ணியங்களைப் பார்த்து என் கேரிக்கையை ஏற்றருள உம்மை கெஞ்சி மன்றாடுகிறேன். உமது பாதத்தில் விழுந்து, சேசு மரி நாமத்ததால் நான் கேட்பது என்னவென்றல் நான் ஜெபத்தில் நிலை நிற்கவும், அர்ச். சூசையப்பரின் பாதுகாவலை அடைந்தோர் கூட்டத்தில நானும் இடம்பெற வேண்டும் என்பதே ஆகும்.
தகப்பனே என் பக்தியின் அடையாளமாக நான் இன்று உமக்கு காணிக்கையாக வைக்கும் இந்த ஜெபக் கொத்தை ஆசீர்வதியும். (மூன்று தமத்திரித்துவ ஆராதனை சொல்லவும்).

#### மாமரியுடன் சேசுவுடனும் அர்ச். சூசையப்பர் வாழ்ந்த மறைந்த வாழ்வுக்கு தோதத்திரமாக சொல்லப்படும் மன்றாட்டுக்கள்.

சேசுநாதர் என் ஆத்துமத்தில் நுழைந்து அதனை பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று அர்ச். சூசையப்பரே எனக்காக வேணடிக் கொள்ளும்.

சேசுநாதர் என் இதயத்தில் வந்து அதில் தேவ சிநேகத்தை தூண்ட வேண்டுமென்று அர்ச். சூசைய்பபரே எனக்காக வேண்டிக் கொள்ளும்

சேசுநாதர் என் புத்திக்குள் வந்து அதற்கு ஒளியூட்ட வேண்டுமென்று அர்ச். சூசைய்பபரே எனக்காக வேண்டிக் கொள்ளும்

சேசுநாதர் என் மனதிற்கு வழிகாட்டி அதற்கு வலுவூட்ட வேண்டுமென்று அர்ச். சூசைய்பபரே எனக்காக வேண்டிக் கொள்ளும்

சேசுநாதர் என் எண்ணங்களை சீர்படுத்தி அதனை தூய்மையாக்க வேண்டுமென்று அர்ச். சூசைய்பபரே எனக்காக வேண்டிக் கொள்ளும்

சேசுநாதர் என் ஆசைகளை நெறிப்படுத்தி அதனை வழிநடத்த வேண்டுமென்று அர்ச். சூசைய்பபரே எனக்காக வேண்டிக் கொள்ளும்

சேசுநாதர் என் செயல்களை கண்ணோக்கி அவற்றை ஆசீர்வதிக்க வேண்டுமென்று அர்ச். சூசைய்பபரே எனக்காக வேண்டிக் கொள்ளும்

சேசுநாதர் மீதுள்ள என் நேசத்தை பற்றியெறியச் செய்தருள வேண்டுமென்று அர்ச். சூசைய்பபரே எனக்காக வேண்டிக் கொள்ளும்

அர்ச். சூசையப்பரே உமது புண்ணியங்களை நான் கண்டு பாவிக்கும் வரத்தை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே மெய்யான தாழ்ச்சியுள்ள மனதை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே சாந்தமான மனதை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே அமைதியான மனதை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே பரிசுத்த தெய்வ பயத்தை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே ஞான வாழ்வில் முன்னேறும் ஆர்வத்தை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே மென்மையான மனதை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே துன்பங்களை தாழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் வரத்தை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே விசுவாசம் தரும் ஞானத்தை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே புண்ணிய வாழ்வில் நிலைத்து நிற்கும் வரத்தை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே என் சிலுவைகளை சுமக்க போதிய திடனை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே இவ்வுலக பெருமைகள் மீது பற்றற்ற மனதை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே ஒடுக்கமான மோட்ச பாதையில் மட்டுமே நடக்கும் வரத்தை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

அர்ச். சூசையப்பரே சகல பாவ சந்தர்ப்பங்களையும் ஒதுக்கித் தள்ளும் தேவ வரப்பிரசாதங்களையும் எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்

*அர்ச். சூசையப்பரே நித்திய ஜீவியத்தின் பேரில் பரிசுத்தப் பற்றை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்*

*அர்ச். சூசையப்பரே விசுவாசம் தரும் ஞானத்தை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்*

*அர்ச். சூசையப்பரே இறுதிவரை நிலைத்து நிற்கும் வரத்தை எனக்கு தர வேண்டுமென்று சேசுவை மன்றாடும்*

*அர்ச். சூசையப்பரே என்னை கைவிடாதேயும்*

*அர்ச். சூசையப்பரே என் இருதயம் எப்பொழுதும் உம்மை நேசிக்கவும், என் உதடுகள் எப்பொழுதும் உம்மைப் புகழவும் செய்தருளும்*

*அர்ச். சூசையப்பரே நீர் சேசுவின் பேரில் வைத்த சிநேகத்தை பார்த்து நானும் அவரை சிநேகிக்க கற்பித்தருளும்*

*அர்ச். சூசையப்பரே அருள் கூர்ந்து என்னை உம்முடைய உண்மையான ஊழியர்களில் ஒருவராக ஆக்கிக் கொள்ளும்.*

*அர்ச். சூசையப்பரே என்னை முழுமையும் உம்மிடம் ஒப்படைக்கிறேன். என் வேண்டுதலை, மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அர்ச். சூசையப்பரே என் மரண நேரத்தில் என்னை கைவிடாதேயும்*

*சேசு மரி சூசையே என் ஆத்துமத்தையும் இருதயத்தையும் உம்மிடம் ஒப்படைக்கிறேன்.*

**அர்ச். சூசையப்பரிடம் எழுப்பப்படும் கூக்குரல்**

*1. அர்ச். கன்னி மரியாயின் கற்புள்ள பத்தாவாகிய அர்ச். சூசையப்பரே, என் நல்ல பாதுகாவலரே, உம்மை மன்றாடி உமது காவலைத் தேடி ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதில்லை என்பதை நினைத்தருளும். இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உம் திருமுன் சாஷ்டாங்கமாய் விழுந்து உமது வல்லமையுள்ள உதவியை கெஞ்சிக் கேட்கிறோம். எங்கள் நேச இரட்சகரின் வளர்ப்புத் தந்தையே! அர்ச். சூசையப்பரே எங்கள் மன்றாட்டை புறக்கணியாமல் தயாபரராய் கேட்டருளும். - ஆமென்.*

*2. மகிமை நிறைந்த அர்ச். சூசையப்பரே, அர்ச். கன்னி மரியாயின் கற்புள்ள காவலரே, சேசுவின் விரத்தரான தந்தையே என்னை நோக்கிப் பாரும். தேவ இஷ்டப்பிரசாத பாதையில் என்னை நடத்தியருளும். நான் கெஞ்சிக் கேட்கும் இந்த அவசரமான தேவையை கவனித்து, உமது மாந்தையில் என்னைப் பொதிந்து கொள்ளும். என் மன்றாட்டிற்கு இடையூராக நிற்கும் தடைகளையும், இக்கட்டுகளையும் களைந்து என் விண்ணப்பத்திற்கு சாதகமான பதிலை சர்வேசுரனுடைய அதிமிகு மகிமைக்காகவும், எனது மீட்புக்காகவும் உதவிட செய்தருளும். தகப்பனே, நீர் செய்கிற உபகாரத்தை ஒருநாளும் மறக்கமாட்டேன். உமக்கு விண்ணிலும் மண்ணிலும் ஆண்டவர் தந்த வல்லமைக்கு நன்றி சொல்லி உமது மகிமையை பிரபலபடுத்துவேன். தகப்பனே! நீர் செய்கிற உபகாரத்தை ஒருநாளும் மறக்க மாட்டேன். உமக்கு விண்ணிலும் மண்ணிலும் ஆண்டவர் தந்த மகிமைக்கு நன்றி சொல்லி, உமது மகிமையை என்றும் பாடுவேன்.*

## அர்ச். சூசையப்பர் பிரார்த்தனை

*சுவாமி கிருபையாயிரும்... மற்றதும்.*

*அர்ச். மரியாயே, - எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.*

*அர்ச். சூசையப்பரே,**

*தாவீது ராஜாவின் கீர்த்தி பெற்ற புத்திரனே,*

*பிதாப்பிதாக்களின் மகிமையே,*

*தேவதாயாரின் பத்தாவே,*

*கன்னிமரியாயின் கற்புள்ள காவலனே,*

*தேவ குமாரனை வளர்த்த தகப்பனே,*

*கிறீஸ்துநாதரை உற்சாகப்பற்றுதலுடன் காப்பாற்றினவரே,*

*திருக்குடும்பத்தின் தலைமையானவரே,*

*உத்தம நீதிமானான அர்ச். சூசையப்பரே,*

*உத்தம விரத்தரான அர்ச். சூசையப்பரே,*

*உத்தம விவேகமுடைத்தான அர்ச். சூசை யப்பரே,*

*உத்தம தைரியசாலியான அர்ச். சூசை யப்பரே,*

*உத்தம கீழ்ப்படிதலுள்ளவரான அர்ச். சூசையப்பரே,*

*உத்தமபிரமாணிக்கமுள்ளவரான அர்ச். சூசையப்பரே,**

*பொறுமையின் கண்ணாடியே,*

*தரித்திரத்தின் அன்பனே,*

*தொழிலாளிகளுக்கு மாதிரிகையே,*

*சமுசார வாழ்க்கையின் ஆபரணமே,*

*கன்னிகைகளின் காவலனே,*

*குடும்பங்களுக்கு ஆதரவே,*

*கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலே,*

*வியாதிக்காரர்களுக்கு நம்பிக்கையே,*

*மரிக்கிறவர்களுக்குப் பாதுகாவலே,*

*பசாசுக்களை நடுநடுங்கச் செய்பவரே,*

*பரிசுத்த திருச்சபையின் பரிபாலனே,*

*லோகத்தின் பாவங்களை... மற்றதும்.*

**முதல்:** *கர்த்தர் அவரைத் தமது வீட்டின் எஜமானாக ஏற்படுத்தினார்.*

**பிணை:** *அவருடைய உடைமைகளையெல்லாம் நடப்பிக்கவும் ஏற்படுத்தினார்.*

பிரார்த்திக்கக்கடவோம்

*சர்வேசுரா சுவாமி! உம்முடைய மகா அர்ச்சிஷ்ட திரு மாதாவின் பரிசுத்த பத்தாவாக*

முத்தரான சூசையப் பரை மனோவாக்குக்கெட்டாத பராமரிக்கையினால் தெரிந்துகொள்ளத் திருவுளமானீரே. பூலோகத்தில் அடியோர்களை ஆதரிக்கிறவரென்று எங்களால் வணங்கப் படுகிற அவர் பரலோகத்தில் எங்களுக்காக மனுப்பேசுகிற வராயிருக்கும்படிக்கு நாங்கள் பாத்திரவான்கள் ஆகத் தக்கதாக, தேவரீர் அனுக்கிரகம் செய்தருள வேணுமென்று மன்றாடுகிறோம். பிதா வோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சதா காலம் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிற வருமாயிருக்கிற ஆண்டவரே. - ஆமென்.

## முடிவு ஜெபம்

ஓ மகிமைக்குரிய பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! ஆண்டவர், பூலோகத்தில் உள்ள எல்லா மானிடர்க்கு மேலாகவும், திருக்குடும்பத்தின் தலைவராகவும் உம்மைத் தெரிந்தெடுத்தாரே! நான் உம்மிடம் கேட்கும் மன்றாட்டு ஏதென்றால் என்னை உமது மாந்தைக்குள் பொதிந்து வைத்துக் கொள்ளும். என் ஆன்மாவிற்கு காவலராகவும், அரணாகவும் இருந்து அதனைக் காத்துக் கொள்வீராக. இப்போதிலிருந்து நான் உம்மை என் தந்தையாகவும் பாதுகாவலராகவும், நல்லாலோசனையாளராக தெரிந்து கொள்கிறேன். எனது உடலையும், ஆன்மாவையும், என்னை முழுமையும் எனக்குள்ள யாவற்றையும், உமது பொறுப்பில் ஒப்படைக்கிறேன்.

என்னை உமது பிள்ளைகளில் ஒருவனாக நினைத்தருளும். கண்களுக்கு புலப்படும் பகைவர்களிடமிருந்தும், கண்களுக்கு புலப்படாத பகைவர்களின் தந்திரங்களிலிருந்தும் என்னைக் காத்தருளும். எல்லா அவசரங்களிலும் எனக்குத் துணையாயிரும். வாழ்வின் கசப்பான வேளைகளில் என்னைத் தேற்றியருளும். விசேஷமாக எனது மரண வேளையில் எனக்கு துணையாயிரும். என்னை காத்திட, உம் திருமகனிடமும், உமது தெய்வீகப் பத்தினியிடமும் ஒரு வார்த்தை சொல்லும். இரட்சணியப் பாதையில் நான் நடக்க அவர்கள் எனக்கு உதவி புரிய மன்றாடும். உமக்கு பிரியமானவர்களில் ஒருவனாக என்னை ஏற்றுக் கொள்ளும். நானும் உமது உதவியைப் பெற தகுதியுள்ளவனாக நடந்து கொள்வேன் சுவாமி!

## அர்ச். சூசையப்பரைக் குறித்து செபம்

மகா பாக்கியம் பெற்ற அர்ச். சூசையப்பரே! எங்க ளுடைய துன்ப வேளையில் உமது பரிசுத்த பத்தினியின் உதவியை இரந்து மன்றாடின பின்பு, உமது பாதுகாவலை யும் நம்பிக்கையோடு தேடி வருகிறோம். தேவ தாயாரான ஜென்மபாவமில் லாமல் உற்பவித்த அர்ச். கன்னிமரியா யிடத்தில் உமக்குள்ள சிநேகத்தின் பேராலும், திவ்விய குழந்தை சேசுநாதருக்கு நீர் காண்பித்த தந்தைக்குரிய அன்பைக் குறித்தும், உம்மிடத்தில் நாங்கள் கேட்கும் மன்றாட்டு ஏதென்றால்..................... சேசுக்கிறீஸ்துநாதர் தமது இரத்தத்தால் தமக்காக சம்பாதித்த சுதந்திரத்தை தேவரீர் கிருபையாய்ப் பார்க்கவும் எங்கள் இக்கட்டிலே உமது பலமுள்ள ஒத்தாசையால் துணையாயிருக்கவும் மன்றாடுகிறோம்.

ஓ! திவ்விய குடும்பத்தை உத்தம ஞானத்தோடு நடத்திவந்த கைத்தாதையே! சேசு கிறீஸ்துநாதர் தம்முடை யவர்களாகத் தெரிந்துகொண்ட ஜனங்களைப் பராமரித் தருளும். ஓ! மிகவும் அன்பு நிறைந்த எங்கள் தகப்பனே! நாங்கள் எவ்வித தப்பிதத்திலும் கேட்டிலும் விழாதபடி எங்களைக் காப்பாற்றும். ஓ! எங்களைப் பாதுகாத்தருளும் படி மேலான வல்லமையுள்ளவரே! நரக சத்துருக்களோடு நாங்கள் செய்யும் யுத்தத்திலே நீர் மோட்ச சிம்மாசனத்தி லிருந்து கிருபையாய் எங்களைப் பார்த்து துணையாய் வருவீராக. திவ்விய பாலகன் முன்னாள் சாவின் ஆபத்துக்கு தப்பித்துக் கொள்ளும்படி தேவரீர் எவ்விதம் ஏதுவாயிருந் தீரோ அவ்விதமே சர்வேசுரனுடைய திருச்சபையை பசாசின் வலையிலும், எவ்வித ஆபத்திலுமிருந்து பாதுகாத்தருளும். உமது பாதுகாவல் இடைவிடாமல் என்றும் இருக்கக் கடவது. உமது புண்ணிய மாதிரிகையாலும், உம்முடைய உதவியின் துணையாலும் நாங்கள் எல்லோரும் பரிசுத்த மாய் சீவித்து பக்தியாய் மரித்துப் பரகதியின் முடிவில்லாப் பாக்கியம் பெற்று வாழும்படி கிருபை செய்ய உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்.

(இந்தச் செபத்தைப் பக்தியோடு சொல்லுகிறவர்களுக்கு ஒவ்வொரு விசையும் 7 வருஷம் 7 மண்டலப் பலன் அர்ச். பாப்பானவர் கொடுத்திருக்கிறார்.)